# Centre for Research on the Economics of Ageing

SMU SINGAPORE MANAGEMENT UNIVERSITY

NEWSLETTER - ISSUE 5 SEPTEMBER 2017



## உங்கள் பதில்கள் எங்களுக்குத் தேவை. நாங்கள் அவற்றை மிகவும் மதிக்கிறோம்

கடந்த சில மாதங்களாக நாங்கள் CREA-வில் கடுமையாக உழைத்து வருகிறோம். ஜூலை 14 அன்று, நாங்கள் நிதி அறிவு மற்றும் பணி ஓய்வுக்குத் தயாராதல் தொடர்பான வட்டமேசை மாநாட்டை நடத்தினோம். ஒரு மாதத்திற்குப் பிறகு, ஆகஸ்டு 16 அன்று, நாங்கள் குடியிருப்பு தொடர்பான வட்டமேசை மாநாட்டை நடத்தினோம்.

முதல் நிகழ்ச்சியில் அரசாங்க அமைப்புகள், வங்கிகள், ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள், நிதி சங்கங்கள், இனஞ்சார்ந்த சுய-உதவி அமைப்புகள் மற்றும் நிதி அறிவு நிலையங்கள் கலந்துகொண்டன. இரண்டாவது நிகழ்ச்சியில் அமைச்சுகள், அரசாங்க அமைப்புகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் கலந்துகொண்டன.

CREA சேகரித்துள்ள விவரங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதையும், கொள்கை உருவாக்குநர்களுக்கு அவை மிகவும் முக்கியமானவை என்பதையும் அனைவரும் ஒப்புக்கொண்டனர். இதற்காக எங்களின் பதிலளிப்பாளர்களான உங்களுக்கு மிகவும் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

நாங்கள் இப்போது சிங்கப்பூர் லைஃப் பேனலின் (Singapore Life Panel®) இரண்டாம் ஆண்டை நிறைவுசெய்துள்ளோம். பதிலளிப்பாளர்களில் மூன்று பேரில் ஒருவர், அல்லது 3,600 சூப்பர்-ஸ்டார் பதிலளிப்பாளர்கள் ஒவ்வொரு கருத்தாய்வையும் நிறைவுசெய்துள்ளனர். பதிலளிப்பாளர்களில் மூன்றில் இரண்டு பேர் ஒரு வருடத்திற்கும் அதிகமான மதிப்புள்ள கருத்தாய்வுகளை நிறைவுசெய்துள்ளனர்.


நாங்கள் ஒவ்வொரு மாதமும் சுமார் 8,000 நிறைவுசெய்யப்பட்ட பதில்களைப் பெறுகிறோம். இது நிச்சயமாக SLP-ஐ முதுமைக்காலம் குறித்த உலகின் மிகப் பெரிய கருத்தாய்வாக உருவாக்குகிறது

நாங்கள் வட்டமேசை மாநாடுகளில் வெளியிட்ட சில கண்டுபிடிப்புகளை உங்களுக்கு இப்போது தெரிவிக்க விரும்புகிறோம்.

## குடியிருப்பு தொடர்பான வட்டமேசை மாநாடு

நாங்கள் மிகவும் மதிப்புவாய்ந்த SLP தரவுகளைப் பயன்படுத்தினோம். மேலும், பதிலளிப்பாளர்கள் எப்போது வீட்டில் குடியேறினார்கள் மற்றும் இது அவர்களின் பணி ஓய்வுகாலத்தில் எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்பது குறித்த காலவரிசையை எங்களால் ஆராய முடிந்தது. வயதான பதிலளிப்பாளர்கள் தங்களின் தற்போதைய வீட்டில் எப்போது குடியேறினார்கள் என்பதை நாங்கள் கணக்கிட்டோம். அதன் முடிவுகள் இங்கு வழங்கப்பட்டுள்ளன.

### பதிலளிப்பாளர்கள் தங்களின் தற்போதைய வீட்டில் குடியேறிய போது அவர்களின் வயது என்ன?





35 வயதை அடைந்தத ஒற்றை பதிலளிப்பாளர்கள் வீடமைப்பு வளர்ச்சிக் கழக (வீவக) நிதி உதவிகளுக்குத் தகுதிபெற்றனர். இதனால்தான் பதிலளிப்பாளர்களில் பெரும்பாலானோர் 35 வயதில் தங்கள் வீட்டில் குடியேறியுள்ளனர். 30 பதிலளிப்பாளர்கள் 20 அல்லது 21 வயதில் தங்கள் வீட்டில் குடியேறியுள்ளனர். அப்போதிலிருந்து அவர்களின் அக்கம்பக்கம் எவ்வளவு மாற்றமடைந்திருக்க வேண்டும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்!

# நிதி அறிவு மற்றும் பணி ஓய்வுக்குத் தயாராதல்

2015ம் ஆண்டின் இறுதியில், ஆர்வம், பணவீக்கம் மற்றும் அபாயம் குறித்த சில கேள்விகளை உங்களிடம் கேட்டோம். வெவ்வேறு நிதி அறிவைக் கொண்டிருக்கும் மக்கள் எவ்வாறு பணி ஓய்வுக்குத் தயராகிறார்கள் என்பது குறித்து எங்கள் ஆராய்ச்சியாளர்கள் ஆர்வமாக இருந்ததே இதற்குக் காரணமாகும். அமெரிக்கா, ஜப்பான் மற்றும் நியூசிலாந்தில் உள்ள மக்களைக் காட்டிலும் உங்களிடம் சிறந்த முடிவுகள் இருந்ததை நாங்கள் கண்டறிந்தோம்.


## நிதி அறிவு

நிதி அறிவு குறித்தக் கேள்விகளுக்கு எத்தனை பதிலளிப்பாளர்கள் ஆகச் சிறந்த மதிப்பெண்ணைப் பெற்றனர்? எ.கா., 'சரி அல்லது தவறு: யூனிட் டிரஸ்ட்டைக் காட்டிலும் ஒற்றை நிறுவனப் பங்குகளை வாங்குவது வழக்கமாகப் பாதுகாப்பான வருவாயை வழங்குகிறது."




இங்கு விலைகள் நிலையாக இருக்கும் காரணத்தினால் சிங்கப்பூரர்கள் பணவீக்கத்தைக் குறைவாக அறிந்திருக்கலாம். மேலும், நமது மக்கள் பொதுவாக நாணயமாற்று விகிதத்தில் அதிக அக்கறையைக் கொண்டிருக்கின்றனர்.

## அதிக நிதி அறிவைக் கொண்ட மக்கள்




அதிக நிதியறிவு கொண்ட பதிலளிப்பாளர்கள் சிறந்த உடல்நலத்துடன் இருப்பதற்கு பழகியுள்ளனர், மிகவும் சிக்கலான முதலீட்டு உத்திகளைக் கொண்டிருக்கின்றனர் மற்றும் தங்களின் பணி ஓய்வு குறித்து அதிக நம்பிக்கையாக உணர்கின்றனர் என்பதை எங்களது ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். வட்டமேசை மாநாட்டின் போது, தங்களின் பணத்தைக் கொண்டு எவ்வாறு சரியான முடிவுகளை மேற்கொள்வது என்பதை இளம் சிங்கப்பூரர்களுக்குக் கற்றுத்தருவதற்கு தாங்கள் பயன்படுத்துகின்ற கைப்பேசி விளையாட்டுகள் குறித்து கல்வி அமைச்சு எங்களிடம் தெரிவித்தது.

## இரகசியக்காப்பு மற்றும் உங்களின் தனியுரிமை



நீங்கள் எங்களிடம் வழங்குகின்ற தகவல்களை நாங்கள் கடும் இரகசியமானதாகக் கருதி பாதுகாப்போம். மேலும், சிங்கப்பூர் தனிநபர் தகவல் பாதுகாப்பு ஆணையத்தின் சட்டத்திட்டங்களின் கீழ், தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டம் 2012 (PDPA) உடன் முழுமையாக இணங்கி நடப்போம்.

## கருத்தாய்வுகளின் தேதிகள்:

- அக்டோபர் கருத்தாய்வு: **1 - 22 அக்டோபர் 2017**
- நவம்பர் கருத்தாய்வு: **1 - 19 நவம்பர் 2017**
- டிசம்பர் கருத்தாய்வு: **1 - 24 டிசம்பர் 2017**

## எங்களைத் தொடர்புகொள்க

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வடிவத்தில் உதவி தேவையென்றால், அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ, கருத்துக்களோ இருந்தால், தயவுசெய்து **6808 7910** என்ற எங்களுடைய மையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது **slp@smu.edu.sg** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்..

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY